காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

28-12-64

சுதந்தரதாகம்!

“புறப்படுங்கள், குழந்தைகளே! நேரமாகிவிட்டது” என்று சிறுவர்களை விரட்டினேன் நான்.

அதுதான் கடைசி ‘பிரியட்’. வேறு வழியில்லாமல் நானும் வகுப்பு அறைக்குள் நுழையக் கிளம்பினேன்.

அப்போது, பள்ளி வேலிக்கு அப்பாலிருந்து யாரோ என்னைக் கூப்பிட்டார்கள்.

வாத்தியார் சார்! சற்று தயவு வையுங்கள்!

நான் திரும்பிப்பார்த்தேன். கூட்டுறவுப் பண்டகசாலையின் ஊழியர் மிரோன் என்னை விளித்தது என்பதை அறிந்தேன். ‘சரி, என்ன சமாசாரம், மிரோ?” என்றேன்; சுரத்தின்றி. ‘நாளைக்கு வேட்டையாடக் காட்டுக்குப் போகலாம், வாருங்கள்! நல்ல காட்டுப்பன்றிகள் கிடைக்கும். பள்ளிக்கூடம் முடிந்தது பண்டகசாலை பக்கம் வாருங்கள் எல்லாம் சொல்கிறேன்’

நான் வகுப்பு அறைக்குள் சென்றதும் முறைப்படி எழுந்து நின்ற குழந்தைகளை உட்காரச் சொல்லிவிட்டு, பாடப்புத்தகத்தைத் திறக்குமாறு பணித்தேன். “இன்றைய பாடத்தை யார் தவறில்லாமல் படித்துக்காட்டப் போகிறீர்கள்?” என்றேன்.

○

மிரோன் அந்தபிராந்தியத்திலேயே மிகவும்கைதேர்ந்தவேட்டைக்காரர், இம்முறை அவர் வேட்டைக்காக விசேஷ ஏற்பாடுகள் செய்திருந்தார். பண்டக சாலையில் சாமான் வாங்க வந்திருந்த வாடிக்கைக்காரர்களைக்கூட கவனிக்காமல் என்னிடம் அளக்க ஆரம்பித்தார். நான் நிச்சயம் வரவேண்டுமென்றார்.

“...சும்மா ஏழெட்டு துப்பாக்கி... பத்துப் பதினைந்து தப்பறையாளர்கள் போதும் ஜமாய்த்துவிடலாம். காடு இந்த ஜன்னலுக்கு வெளியே தெரிகிறதே அதுதான். அதில் சில பகுதிக்குள் வேட்டைக்குப் போகக்கூடாது என்று தடை இருப்பது பது மெய்தான்......ஆனால் மறற் இடங்களில் நிறைய வேட்டையாட முடியும் என்றார்.”

எனக்கு நன்றாகக் குறிவைத்துச் சுடுவதற்குத் தெரியாது என்றும், நான் வருவதால்பயனில்லை என்றும் உண்மையில் என்னால் அவர்கள் வேலையே கெடக்கூடும் என்றும் பலவாறு கூறித் தப்பித்துக் கொள்ள முயன்றேன் நான்.

“என்ன சொன்னீர்கள்? அதெல்லாம் நடக்காது! நாளை அதிகாலையில் கருக்கலோடு உங்கள் வீட்டிற்கு வருவேன்.”

○

காலை நேரத்து மூடுபனி, பைன் மரங்களின் மீது போர்த்தப்பட்ட பட்டுப் போர்வைபோல் காட்சியளித்தது.

ஒரு பெரிய பைன் மரத்தின் பின்னால் பாதுகாப்பாக நின்றுகொண்டு துப்பாக்கி சகிதம் தயாராக இருந்தேன் நான். காட்டிலிருந்து பிரியும் பாதையைக் காவல் காப்பது எனது பணியாக ஒதுக்கப்பட்டது. இந்தப் பாதை ஒருவிதத்தில் மலைகளுக்கிடையிலான கணவாய்போன்றது. இந்த வழியில் நிச்சயமாக மிருகங்கள் வரும். அப்படித்தான் மிரோ என்னிடம் சொல்லி, அந்த இடத்தில் என்னை நிறுத்திவிட்டுச் சென்றார்.

இந்தப் பாதையின் மறு புறத்தில் ஒரு சிறு குன்றுக்குப் பின்னால் மிரோ ஒளிந்துகொண்டார். இதன்றி எங்களுடன் வந்திருந்த ஐந்தாறு பேரும், மிரோவிற்கு அருகிலிருந்து புதர்களில் ஒளிந்துகொண்டனர்.

“ஓஹோ!....ஓஹோ!......ஆஹா! ஆஹா!” என்று தப்பறையாளர் பெரும் கூப்பாடு போட்டனர்.

நான் சர்வ ஜாக்கிரதையாக எனக்குரிய இடத்தில் நின்றுகொண்டு, வேட்டை மிருகம் வந்தால் எப்படிக் குறி பார்ப்பது, எப்படிச் சுடுவது என்பதையெல்லாம் பற்றி ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்தேன். ஏதாவது அந்த வழியாக வந்தால்......ஒன்றல்ல, பல காட்டுப் பன்றிகளைச் சுட்டு வீழ்த்திவிடுவது என்று நான் துணிந்துவிட்டேன்.

எனக்கு இடதுபுறத்தில் சற்றுத் தொலைவில் ஓடிய ஒரு சிற்றோடை, சலசலத்துக்கொண்டு, தனக்குத் தானே ஏதோ பேசிக்கொள்வது போல் இருந்தது. இதைத் தவிர வேறு சப்தம் எதுவும் கேட்கவில்லை.

“......ஆனால் பிரம்மாண்டமான ஏதாவது—இருநூறு, முன்னூறு ராத்தல் எடையுடைய பெரிய மிருகம் ஏதாவது — வந்துவிட்டால்...? வந்தாலென்ன? ஒரே குண்டில் வீழ்த்திவிட மாட்டேனா!” — என் மனம் ஒரு நிலையில் இல்லாது அலை மோதியது.

நான் மறைந்திருந்த மரத்தில் ஐந்தாறு அடி உயரத்தில் ஒரு கிளை இருந்தது. ஏதாவது ஆபத்தென்றால் அதில் ஏறிக்கொள்ளலாம் என்று எண்ணியது என் கோழை மனம். ஆனாலும் கொடிய காட்டு மிருகங்களால் அந்த உயரத்தில் கூடத் தாவி, அவற்றின் கூரிய பற்களால் என்னைப் பதம் பார்க்க முடியுமே, என்ன செய்வது?

“......ஆனால், நான் முதல் குண்டிலேயே அந்த மிருகத்தை வீழ்த்திவிட்டால்!......பிறகு, சொல்லவா வேண்டும்!......”

என் மனக்கண் முன் நான்கு வேடர்கள் ஒரு பெரிய காட்டுப் பன்றியை ஒரு கம்பில் கட்டித் தோளில் சுமந்துவரும் காட்சி எதிர்ப்பட்டது.

அப்போது என்ன மணி என்று பார்க்க முயன்றேன். நான் பாக்கெட்டு கடிகாரத்தை எடுப்பதற்குள், ஏதோ நொறுங்கி விழும் சப்தமும், செடிக் காம்புகள் உடையும் ஒலியும் கேட்டது.

நான் என் துப்பாக்கியைத் தயாராக உயர்த்திப் பிடித்துக்கொண்டேன். எனது பற்கள் வெடவெட என்று தாளம் போட்டன.

அடுத்த வினாடி—

ஒரு பெரிய காட்டுப் பன்றி...... இல்லை, இல்லை! முற்றிலும் எதிர்பாராதவிதமாக ஓர் அழகிய பெண் மான் அப்பாதையிலே வந்து ஆடாது அசையாது சிலைபோல் நின்றது. சிகப்பு கலந்த பழுப்பு நிறமுடையதாக இருந்த அந்த மானின் மார்பு வெளுப்பாகவும் வயிற்றுப் பகுதி கறுப்பாகவும் இருந்தது. அந்த அழகிய மான் என்னையே உற்றுப் பார்ப்பதுபோல் தோன்றியது.

அதன் வெண்ணிற மார்பைக் குறிபார்த்தேன், நான். ஆனால் அந்த சாதுவான அழகிய பெண்மான் கள்ளம் கபடமற்ற கண்களுடன் என்னை உற்றுப் பார்த்தது.

"நான் பயங்கரமான பேராபத்தான மிருகமாக உங்களுக்குத் தோன்றுவதானால், என்னைச் சுடுவதென்றால், சுட்டுத்தள்ளுங்களேன்" என்று அது என்னைப் பார்த்துக் கூறுவதுபோல் தோன்றியது.

துப்பாக்கியின் "டிரிகரில்" பதிந்தன எனது விரல்கள், ஆனால்...... அதை அழுத்துவதற்குப் பதில் எனது கை துப்பாக்கியின் பிடியிலிருந்து நழுவியது.

சிலைபோன்று நின்றிருந்த அந்தப் பெண் மான், வந்தவழியே திரும்பிச் சடுதியில் மறைந்தது.

அடுத்த சில வினாடிகளுக்குள்—மான் சென்ற திசையிலிருந்து துப்பாக்கி வெடிசப்தம் கேட்டது. அந்த ஒலி, காட்டின் மேடுபள்ளங்களில் எதிரொலித்தது.

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. என்னை நோக்கி மிரோ ஓடிவந்துகொண்டிருந்தார், ஏதோ வெறிபிடித்தவர்போல்.

"அதோ! பெண் மான்! அதனைச் சுட்டேன் நான்" என்று கூவிக்கொண்டே வந்த மிரோ, என்னையும் அவரைப் பின்தொடரும்படி பணித்தார்.

"இதோபார், இரத்தம் சிந்தியிருக்கிறது! ஆம், அந்த மானின் இரத்தம்தான்! என்றார் மிரோ.

அவர் சுட்டிக்காட்டிய இடத்தில் புதிய இரத்தம்! செக்கச் செவேலெனச் சிந்தியிருந்தது.

"நிச்சயமாக ஓடைக்கு அருகில்தான் அது இருக்கவேண்டும். நேராகப் புறப்படுங்கள்!"

நாங்கள் ஓடையை அடைந்ததும் மிரோ என்னை நிறுத்தி, அனுபவமிக்க யுத்த நிபுணரைப்போல் பின்வருமாறு கூறினார்.

"அந்தப் பெண்மானை நான் பலமாகக் காயப்படுத்தியிருந்தால், (அதுபற்றி எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை) இங்கே, இந்தஓடைக்கு அருகில்தான் அது வந்து விழுந்திருக்கவேண்டும். மான்கள் இறப்பதற்கு முன்பு ஓடையை நோக்கிச் சரண் அடைவதுதான் வழக்கம். ஓடைக்கு அருகில் மண்டையைப் போட்டால்தான் அவற்றிற்குத் திருப்தி!

ஓடையின் இரு மருங்கிலும் உன்னிப்பாகக் கவனித்தேன்.

கடைசியாக ஒரு புதருக்குப்பின் அதனைக் கண்டேன். இடதுபக்கம் ஒருக்களித்துப் படுத்துக்கொண்டு தனது நீண்ட கழுத்தினை ஓடையை நோக்கி நீட்டியிருந்தது. மிரோ சொன்னது சரியாத்தான் போய்விட்டது.

எனது காலடி சப்தம் கேட்டதும் அந்தப் பெண்மான் அதன் காதுகளை உயர்த்தியது; பிறகு எழுந்து நிற்க முயன்றது; ஆனால் முடியாமல் மீண்டும் தரையில் விழுந்தது. அப்போதுதான், அதன் இடது துடையிலிருந்து இரத்தம் பீறிட்டு வருவதைக் கண்டேன்.

ஓசையிடாமல் மெதுவாக அதனை அணுகினேன். பாவம், சாதுவான அந்த மிருகம் பயத்தினால் நடுங்கியது. அதன் தலையை மிருதுவாக உயர்த்தினேன். அதன் மென்மையான கரிய விழிகளிலிருந்து கண்ணீர் வடிந்தது.

பிறகு அதன் கழுத்தையும் மிருதுவாக வருடிக்கொடுத்துக்கொண்டே "பயப்படாதே, என் அன்பே!" என்றேன். "உனக்கு மட்டும் மரணாபத்தான காயம் ஏற்படாதிருந்தால், எல்லாம் சரியாகிவிடும், பார். அழாதே, கண்ணே!"

அந்தப் பெண்மானின் கண்ணீர் இன்னமும் நிற்கவில்லை. ஆயினும் அது என்னை அன்புடன் நோக்கியதாகத் தேன்றியது.

"ஓஹோ, இங்கேதான் அது இருக்கிறதா? நல்லது! இனி நம்மிடமிருந்து அது தப்பமுடியாது" என்று மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தவாறே, துப்பாக்கியை உயர்த்தி அந்த மானைச் சுடுவதற்குக் குறிபார்த்தார் மிரோன்.

"நிறுத்து!" என்று கூச்சலிட்டு, மிரோவைத் தடுத்தேன் நான். இவ்வளவு அழகான சாதுவான, நல்ல ஜீவனை எப்படித்தான் உங்களால் கொல்லமுடிகிறதோ இதோ, பாருங்கள், அது தாரை தாரையாக வடிக்கும் கண்ணீரை" என்றேன்.

"அது தானாகமடிந்து கழுகுக்குத் தீனியாகவேண்டும் என்கிறீர்களா?" என்று கோபத்துடன் கேட்டார் மிரோ,

"இல்லை. இனி நான் எந்தவிதமான வேட்டைக்கும் வரமாட்டேன். இந்த மானை நான் விலைகொடுத்து வாங்கிக்கொள்கிறேன். இதை நான் நேராக கிராமத்திற்குத் தூக்கிப் போய், கிராம டாக்டரிடம் சிகிச்சை அளிக்கப்போகிறேன், அது உயிர் பிழைத்தால் நல்லது. இல்லையேல் ...."

கல்நெஞ்சம் படைத்த மிரோவின் சம்மதத்தைப் பெற நான் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல.

ஆரம்பத்தில் முனிசிபல் டாக்டர் என் வீட்டிற்கு வந்து அந்த மானுக்குச் சிகிச்சையளிக்கச் சுணங்கினார். பிறகு நாளாவட்டத்தில் அவருக்கு அந்த அழகிய மானிடம் ஒருவித பற்றுதல் ஏற்பட்டுவிட்டதால், நாள் ஒன்றுக்கு இருமுறைகூட வீட்டுக்கு வந்து சிகிச்சை அளித்தார்.

சில நாட்களுக்குப் பிறகு அந்தப் பெண்மான் எழுந்துநிற்கத் தொடங்கியது. பிறகு காயம் பூராவும் விரைவிலேயே ஆறிவிட்டது. காயம்பட்ட இடத்தில் மட்டும் ஒரு சிகப்பு நிறத் தழும்பு இருந்தது.

மான் குட்டி பூரண குணம் அடைந்ததில் நான் அடைந்த மகிழ்ச்சியை என்னென்று சொல்வேன். அந்த மானுடன் நான் நாள்தோறும் பல மணி நேரம் கழித்தேன். அதற்கு ஓட்சும் வைக்கோலும், ரொட்டித் துண்டும், தெளிந்த ஊற்று நீரும் அளித்தேன்.

'கோரா' என்று அதற்குப் பெயரிட்டேன். பல்கேரிய மொழியில் இதன் பொருள் 'காடு' என்பதாகும்.

" 'கோரா, கோரா' இதோ ரொட்டித் துண்டு. எல்லாம் உனக்குத்தான், கோரா, சாப்பிடு." ஆனால் அதற்கு அதன்பெயர் தெரியவில்லை!

அக்கம் பக்கத்திலிருந்தவர்களுக்கும், ஏன், அந்த கிராமம் முழுவதற்குமே, வாத்தியார் மான் வளர்க்கிறார் என்பது தெரிந்துவிட்டது.

மிரோவும்கூட இப்போதெல்லாம் அந்த மானைப் பார்க்க சில சமயங்களில் வந்து போனார்.

ஒரு நாள் நான் பள்ளிக்குச் சென்றபோது,குழந்தைகளெல்லாம் ஒன்றோடு ஒன்று முட்டி மோதிக்கொண்டு, என்னைச் சூழ்ந்துகொண்டு வெட்கத்துடனும் தயக்கத்துடனும் பார்த்தன.

"என்ன சமாசாரம், குழந்தைகளே! ஏதோ என்னிடம் கேட்க விரும்புவதுபோல் தோன்றுகிறதே" என்றேன் நான்.

உடனே, சுமார் பத்துப் பதினைந்து பையன்களும் சிறுமிகளும் அவர்களது கையை உயர்த்தினர். ஒரு சின்னஞ் சிறுபெண், எல்லோருக்கும் முன்பாக முந்திக்கொண்டாள்:

(15-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

மலர் 1 27—12—64 இதழ் 23

உரிய நேரத்தில்

திருவள்ளுவரைவிடவா, உழவுத் தொழிலைப் பாராட்ட முடியும்? ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்’ என்று அடித்துச் சொல்லிவிட்டார் வள்ளுவர். ஆனால் இன்றைய நிலையில் உழவனுடைய நிலை பெருமைக்குரியது என்றோ, போதிய வருவாய் உடையது என்றோ கூற முடியாது. உலகத்தில் எத்தனையோவிதமான மாற்றங்கள் பல்வேறு துறைகளில் தோன்றிவிட்டன. பருத்தியில்லாமல், பட்டு இல்லாமல், கம்பளி இல்லாமல் ஆடை நெய்ய மனிதன் கற்றுக்கொண்டான்; பொன் இல்லாமல், இரும்பு இல்லாமல், பொருள்களைக் கருவிகளைச் செய்யக் கற்றுக்கொண்டான்; உறவில்லாமல் கரு வளர்வதற்கு வழி கண்டான். இப்படி எத்தனை எத்தனையோ மாற்றங்கள் உலகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நமது நாட்டில் உள்ள அடிப்படைத் தொழிலான உழவையும் நெசவையும் அம்மாற்றங்கள் பெரிய அளவில் தொட்டதாகத் தெரியவில்லை. நெசவுத் தொழிலிலாவது ஓரளவுக்கு, புதுமை இடம்பெற முடிகிறது, பெறுகிறது. ஆனால் உழவுத் தொழில் பெரும்பாலும் முன்னிருந்த நிலைமையிலேயே இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. விஞ்ஞானம் விளைவிக்கும் அற்புதங்களையும், சாதனைகளையும் ஏற்றுப் பயன்படும் தொழிலாக உழவு இன்னமும் மாறவில்லை. ஏன் மாறவில்லை என்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம். உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்போரின் மனம் புதுமையை அவ்வளவு சுலபத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை எனலாம், ஏற்றுச் செயல்படக்கூடிய வசதி இல்லை எனலாம்; இன்னும் வேறு எத்துணையோ காரணங்கள் கூறக்கூடும். இவற்றையெல்லாம்விட முக்கியமான காரணமாக இருப்பது, விஞ்ஞானத்தின் விளைவு, ஆராய்ச்சியின் முடிவு, விவசாயிக்கு உரிய நேரத்தில் கிடைக்கவில்லை என்பதேயாகும். கரும்பு வளர்ப்பு அபிவிருத்திபற்றிய 5-வது அகில இந்திய மாநாடு அண்மையில் கோவையில் நடைபெற்றபோது, அதில் கலந்து கொண்டு பேசிய கரும்பு நிலைய இயக்குநர் திரு. துல்ஜாராமராவ் அவர்கள்,

> “ஆராய்ச்சியின் கண்டு பிடிப்புகளை உடனடியாகச் செயல் முறையில் கொண்டு வருவது விவசாய ஆராச்சியின் முக்கிய பயனாகும்.”

என்று வற்புறுத்தியுள்ளார். அதோடு ஆராய்ச்சி நிலையத்தில் காணும் முடிவுகள் விவசாயிக்கு வந்து சேருவதற்கு 7 அல்லது 8 ஆண்டுகள் ஆகின்றன என்றும் கூறியுள்ளார். இத்தனை காலத்தாழ்வுக்கு என்ன காரணமோ தெரியவில்லை. ஆராய்ச்சி என்பது வீண் பொழுதுபோக்குக்காகச் செய்யப்படுவது அன்று. இன்றிருக்கும் நிலையில் நாளை ஒரு வளர்ச்சி வேண்டும் என்பதற்காகச் செய்யப்படுவதே ஆராய்ச்சி எனவே அதன் முடிவுகளை உடனுக்குடன் செயல்படுத்தும்போதுதான், உண்மையான பலன் காண முடியும்.

உணவு அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்களும் அம்மாநாட்டைத் துவைக்கிவைத்துப் பேசுகையில் “விவசாயத்தில் விஞ்ஞான முறைகளைப் புகுத்த வேண்டும்” என்று வலியுறுத்திக் கூறியுள்ளார். இன்றுள்ள உணவுப் பற்றுக்குறையைப் போக்குவதற்கான பல வழிகளில் இதுவும் ஒன்று என்று கூறியுள்ளார்.

விஞ்ஞான முறையில் விவசாயம் செய்ய வேண்டும் என்று ஒருவன் எண்ணினாலும், புதிய கண்டுபிடிப்பு ஒன்று அவனுக்குத் தெரிவதற்கு 8 ஆண்டு ஆகிறது என்றால் அவனுடைய உற்சாகம் அதுவரை குறையாது இருக்கும் என்று எப்படிச் சொல்ல முடியும்?

காலதாமதம் எங்கு ஏன் ஆகிறது என்பதைக் கண்டறிந்து, குறையைத் தவிர்த்து, விவசாயிக்கு உரிய நேரத்தில் விஞ்ஞானம் வந்து உதவ வேண்டும்.

காய்ச்சல் இருக்கும்போது மருந்து தரப்படுமானால் பயன் இருக்கும்; பாராட்டும் சொல்லலாம். அதைவிடுத்து, காய்ச்சல் நின்று நாலு நாள் ஆனபிறகோ, காய்ச்சல் கொண்டவன் மூச்சு நின்று எட்டு நாள் ஆனபிறகோ மருந்து எவ்வளவுதான் குணமுடையது என்றாலும், பயனோ, பாராட்டோ கிடைக்குமா?

கைதி எண் 6342

தம்பி!

25—4—64

இன்று மாலை, துளசிங்கம், கிருஷ்ணன் உள்ளிட்ட 15 தோழர்கள் 'ஜாமீனில்' வெளியே சென்றனர். என்னைக் காண ராணி, பரிமளம், சரோஜா மூவரும் வந்திருந்தனர். திருவண்ணாமலை சண்முகம் இல்லத்தில் நடைபெற்ற திருமணத்திற்குச் சென்றதாகவும், மண மக்களை வாழ்த்திப் பேசியதாகவும் பரிமளம் சொல்லக் கேட்டு ஆச்சரியமடைந்தேன்; ஏனெனில் கூச்சம் காரணமாக. பரிமளம் பேசுவது இல்லை; மாணவர் கூட்டங்களிலேகூட. என்றாலும் இம்முறை இரண்டொரு விநாடிகள் பேசியதாகக் கூறினான். காஞ்சிபுரத்திலிருந்து பரிமளத்துடன் திருவண்ணாமலை திருமணத்துக்கு, ராஜகோபால் சென்று வந்ததாகவும் அறிந்துகொண்டேன்.

பரிமளம்—இங்கோவன்—கௌதமன்—பாபு இவர்களில் பாபு, கடைசிபையன்—சிறுவன்—இவர்களில், அரசியல் ஈடுபாடு, கழகத் தொடர்பு யாருக்கு அதிகம் என்று நண்பர்கள் கேட்டார்கள். கௌதமன் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறான், எனவே அரசியல் நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதில்லை, ஆனால் அரசியல் கூட்டங்களுக்குக்குறிப்பாகக்கழகக் கூட்டங்களுக்குச் செல்லுவான், பத்திரிகைகளும் படிப்பதுண்டு; சிறுவனாக இருந்த பொழுது, நாவலர் நெடுஞ்செழியன் பேசுவதுபோலவே பேசிக் காட்டி எங்களை மகிழ்விப்பான். ஆனால் அவன் அரசியலில் ஈடுபடக்கூடியவனாக எனக்குத் தெரியவில்லை; பரிமளம், அரசியல் பிரச்சினைகளையும், குறிப்பாகக் கழகப் பிரச்சினைகளை மிக நல்லமுறையில் அறிந்து வைத்திருக்கிறான். ஆனால் மருத்துவத் துறையில் ஈடுபடத் தன்னைத் தயாரித்துத்துக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது அவனும் அரசியலில் ஈடுபட இயாலாது என்பது தெரிகிறது. இளங்கோவன், அச்சகம் நடத்துவது, புத்தகம் வெளியிடுவது, பத்திரிகை நடத்துவது ஆகியவற்றில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்திருக்கிறான்; இந்தத் துறையில், பரிமளம் அவனுக்குப் பெருந்துணையாக இருக்க முடியும். 'திராவிடநாடு' இதழ் நடத்த இயலாமல் நிறுத்தப்பட்டுப் போய்விட்டது; நின்று அதிக நாள் ஆகிவிட்டதால், அதற்கான சர்க்கார் அனுமதியும் நீக்கப்பட்டுவிட்டது; எனவே மீண்டும், வெளிவர இயலாத நிலை. இந்நிலையில் அல்லி அச்சகம் என்ற அமைப்பை நடத்தவும், காஞ்சி என்ற வார இதழ் வெளியிடவும் இளங்கோவன் முனைந்திருக்கிறான். 'காஞ்சி' இதழில்தான் இனி நான், தம்பிக்குக் கடிதம், ஊரார் உரையாடல், அந்திக்கலம்பகம் போன்ற பகுதிகளை வெளியிடவேண்டி ஏற்படும் என்று நினைக்கிறேன் என்று விவரம் கூறினேன். 'காஞ்சி' என்பது ஊரின் பெயர், அப்படித்தானே என்று நண்பர்கள் கேட்டார்கள். ஊரின் பெயர் மட்டுமல்ல, அது ஒருவிதமான உள்ளப்பாங்கையும், முறையையும்கூடக் குறிக்கும் சொல் என்று கூறினேன். காஞ்சி எனும் சொல்பற்றிய விளக்கத்தை அன்பழகன் எடுத்துக் கூறினார்.

இன்றிரவு, தி. மு. க. மாநாட்டு முகப்பு வாயில் ஓவியம் ஒன்று வரைந்தேன்.

ஒரு வேலை நிறுத்தத்தைப் பின்னணியாகக் கொண்ட 'அல்லும் பகலும்' என்ற ஆங்கிலக் கதைப் புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன். நீதி கேட்கும் தொழிலாளர்களைப் பொதுஉடைமை வாதிகள், பலாத்காரவாதிகள் என்று குற்றம்சாட்டி, அடித்து நொறுக்குவதும், சுட்டுத் தள்ளுவதுமான கொடுமைகளைச் செய்யும் ஆட்சிமுறையைக் கண்டித்து எழுதப்பட்டுள்ள புத்தகம். எளிய நடையில், ஆனால் உள்ளது உள்ளபடி தெரியத்தக்க முறையில், எழுதப்பட்டிருக்கிறது.

26—4—64

குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் இல்லை. எல்லாத் தோழர்களும் ஏதேனும் படித்தபடி இருக்கிறார்கள்.

இரண்டு நாட்களாக மதியழகனுக்கு உடல்நலமில்லை; காலில் பாதத்தருகே வலி; இலேசாக எலும்பு முறிவு, கீறலளவுக்காகிலும் இருக்குமோ என்று எனக்குச் சந்தேகம். இன்று இங்கு வந்த டாக்டரிடம் எக்ஸ்ரே எடுக்க, மருத்துவ மனைக்கு அனுப்பலாமே என்று யோசனை கூறினேன். செய்யலாம் என்றார், ஆனால் பிறகு பெரிய டாக்டர் இது தேவை இல்லை என்று கூறிவிட்டதாக அறிந்துகொண்டேன்.

வெப்பம் அதிகமாகிக்கொண்டு வருவதாலும், இரவு நேரத்தில் எங்களைப் போட்டு அடைத்து வைக்கும் கொட்டடிக்குள் காற்று புகுவதில்லை என்பதாலும், எல்லோருக்குமே ஒருவிதமான அயர்வு ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

அன்பழகன், என்னைப்போலப் படம்போடத் தொடங்கிவிட்டார். மணிக்கணக்கிலே அதிலே ஈடுபட்டுவிடுகிறார். ஓவியங்கள் எப்படி இடுந்தபோதிலும், எங்கள் மூவருடைய உடல், பலவண்ணக் கலவையாகி விடுகிறது. காட்டுக்காட்சி ஒன்று வரையும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன் — ஓரளவுக்குத் தயாராகிவிட்டிருக்கிறது. அடர்ந்த காடு—மலைகள்—ஒருபுறம் வேங்கை மற்றோர்புறம் யானை. யானையைவிட, வேங்கை பெரிய அளவாக இருப்பதாகச் சுந்தரம் கேலி பேசினார்-தம்பி! உனக்குப் பதினாறு அடி வேங்கையைப்பற்றித் தெரியாது! அது இது என்றுகூறிச் சமாளித்துக்கொண்டேன். எப்போதுமே எனக்கு ஓவியம் என்றால் மிகுந்த விருப்பம். நமது தோழர்களில் பலருக்கு, வீண்செலவு என்று தோன்றினாலும்கூட, ஒவ்வொரு மாநாட்டிலும் ஓவியக்காட்சி நடத்தச் சொல்லி வற்புறுத்துவதும், இந்த விருப்பம் காரணமாகத்தான். நடுத்தர நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் ஓவியக் காட்சி மூலம் நல்லறிவு பரப்பும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று எனக்கு நீண்ட காலமாக ஆவல். ஓவியக் கண்காட்சி, நாடகம் எனும் இந்த இரண்டும் ஒப்பற்ற பலனளிக்கத் தக்க முறைகள், என்பதில் அனேகமாக ஒருவருக்கும் சந்தேகம் எழாது என்று கருதுகிறேன்.

27—4—64

இன்று காலையில், சிறைத் துணை மேலதிகாரி, பார்த்தசாரதியை அழைத்துவரச் செய்து இனி காலை 7-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரையில் சிறை உடையில்தான் இருக்கவேண்டும் என்று கூறி அனுப்பினார்—கண்டிப்புடன். காரணம், இங்கு சில தோழர்கள் காலையில் சிறை உடை அணியாமல், கீழே நின்று பேசிக்கொண்டிருந்தார்களாம். அதை அந்த அதிகாரி பார்த்துவிட்டிருக்கிறார், எனவே கண்டிப்பான உத்திரவு அனுப்பிவைத்தார்.

சிறையில் ஏற்பட்டுவிடும் எந்தவிதமான நிகழ்ச்சிகளுக்கும், சிறை அதிகாரிகளின் பேரில் வருத்தப்பட்டுக்கொள்வதிலோ, கோபித்துக்கொள்வதிலோ, பொருளுமில்லை, பலனும் இல்லை என்று, வருத்தப்பட்டுக்கொண்ட தோழர்களுக்குக் கூறினேன். அரசு நடத்துபவர்கள், அரசியல் கைதிகளை நடத்தும் முறை தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கவேண்டும் என்று புதிய ஏற்பாடு மேற்கொண்டாலொழிய, சிறையில் அமுல் இதுபோலத்தான் இருக்கும்.

இன்று பத்திரிகை பார்த்துத்தான் தெரிந்துகொண்டோம்; கைது செய்து கொண்டுவரப்பட்ட, மாநகராட்சிமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் சிறையில் தாக்கப்பட்டார் என்றசெய்தியை. பதறினோம், வருந்தப்பட்டோம். முழுத்தகவல் கிடைக்கவுமில்லை, நிகழ்ச்சிக்குக் காரணம் கூறுவாருமில்லை.

சிறையில், புதிய ஜெயிலர் வந்திருக்கிறார். இளைஞர். நல்லவராகக் காணப்படுகிறார். இன்று சிறையில் எங்கள் பகுதிக்கு வந்திருந்து, நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இந்த வேலையில் அமர்ந்தாராம். இதுவரை சேலம் மத்திய சிறையில் வேலை பார்த்துவிட்டு இப்போது இங்கு வந்திருக்கிறார்; பெயர் குணசேகரன்—திருச்சி மாவட்டமாம். லால்குடிக்கு அருகே ஒருஊர்.

சேலம் சிறையில் மூன்று ஆண்டு வேலை பார்த்தான பிறகு மற்ற இடங்களில் வேலை பார்ப்பது எளிதுதான், என்று நான் கூறினேன்—அவரும் சிரித்துக்கொண்டு, ஆமாம், என்றார். சேலம் சிறை, திரும்பத் திரும்பச் சிறைப்படும் 'கைதிகள் நிரம்பிய இடம். பல முறை சிறைக்கு வருபவர்களை, கருப்புக் குல்லாய் என்பார்கள்.

இன்று மெயில் பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்து, ஒரு கணம் பதறிப் போனேன்; இந்தி எதிர்ப்பு அறப்போரினை நான் வெளியே வந்ததும் நிறுத்திவிட எண்ணுவதாகவும், என்னை வந்து பார்த்த முக்கியமான நண்பர்கள் சிலரிடம் இதுபோல நான் சொல்லி அனுப்பியதாகவும், மெயிலில் சேதி வந்திருந்தது. நான் நினைத்துக் கூடப் பார்த்திராத ஒன்றை, இப்படித் துணிந்து, மெயில் இதழ் வெளியிடுவது கண்டு நான் பதறிப்போனேன். இவ்விதமான, பத்திரிகைத் தாக்குதல்களிலிருந்து தப்பிப் பிழைத்து, இந்த அளவு வளர்ந்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, பெருமிதம் எழத்தான் செய்கிறது. அண்ணா! இந்தப் பத்திரிகைகளில் வெளிவருவதை நமது தோழர்கள் நம்பமாட்டார்கள்; ஏனெனில், நீங்கள்தான் முன்பே சொல்லிவிட்டிருக்கிறீர்களே, இந்திஎதிர்ப்பு அறப்போர் சம்பந்தமாக, நம்நாடு, முரசொலி எனும் ஏடுகளில் வருவதைத் தவிர மற்ற எதனையும் நம்பவேண்டாம் என்று, என்று அரக்கோணம் ராமசாமி கூறினார். அவர் சொன்னது போலவே, நமது கழகத் தோழர்கள் பத்திரிகைகள் இட்டுக் கட்டி வெளியிடுபவைகளை நம்பமாட்டார்கள் என்ற உறுதி எனக்கும் இருக்கிறது என்றாலும் பத்திரிகைகள் திட்டமிட்டு இந்தக் காரியத்தைச் செய்து வருவது பற்றி மிகுந்த கவலை எழத்தான் செய்கிறது; கழகத்துக்கு ஊறு தேடுகிறார்களே என்பதல்ல எனக்குள்ள கவலை, ஜனநாயக முறை வெற்றி பெறுவதைக் குந்தகப்படுத்துகிறார்களே என்பதுதான். இந்த நாட்டிலே இனி ஒரே கட்சி ஆட்சிதான் என்று அறிவித்துவிட்டால்கூட நிலைமை எத்துணையோ நல்லதாக இருக்கும்; ஜனநாயகம், எதிர்க்கட்சி; பொதுத் தேர்தல், பேச்சுரிமை என்று உதட்டளவில் கூறிக்கொண்டு, செயலில், எதிர்க் கட்சிகளே வளர முடியாதபடி நடந்துகொண்டு வரும் போக்குதான், மிகவும்

ஆபத்தானது. இது குறித்து நண்பர்களுடன் இன்று பேசிக்கொண்டிருந்தேன்.

28—4—64

தமிழகத்தில், சட்டமன்ற பாராளுமன்றத் தொகுதிகளைத் திருத்தி அமைக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கான வெளியீடு, குழுஉறுப்பினர் மதியழகனுக்கு இன்று அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. நமது நண்பர்கள் இதனை மிகுந்த ஆவலுடன் ஆராய்ந்து பார்க்கலாயினர். எந்தெந்தத் தொகுதிகளில் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டிருக்கின்றன, அதனால் ஏற்படக்கூடிய சாதகபாதகம் என்னென்ன என்பது பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். பல தொகுதிகளைப் பிய்த்து எடுத்து, சிலசில பகுதிகளை வேறு தொகுதிகளுடன் ஒட்டவைத்திருக்கிறார்கள். சில பொதுத் தொகுதிகளை இப்போது தனித் தொகுதியாகவும், சில தனித்தொகுதிகளைப் பொதுத் தொகுதியாகவும் மாற்றிவிட்டிருக்கிறார்கள். சில தொகுதிகளின் அமைப்பு ஜாதி உணர்ச்சிக்கு இடம் தருவதாகவும் இருக்கிறது. இந்தப் பிரச்சினையை, நமது கழக, மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள்கொண்ட ஒரு கூட்டத்தில், தொகுதி அமைப்புக்குழு உறுப்பினர்களான மதியழகனும் ராஜாராமும் எடுத்துவிளக்கி கலந்து பேசவேண்டும் என்று நினைக்கிறேன். விரைவில் இது பற்றி மிகத் தீவிரமான கவனம் செலுத்தவேண்டும். புதிதாகத் தொகுதிகளை அமைக்கும்போது, இது போன்ற ஒட்டு வெட்டு ஏற்படத்தான் செய்யும். ஆனால் இது, வெறும் வசதிகாரணமாக மட்டும் அமைந்துவிடுவதில்லை; கட்சி, ஜாதி, மேட்டுக்குடி ஆகியவைகளால் எழும்பிவிடும் உணர்ச்சிகளும், காரணங்களாக அமைந்துவிடுகின்றன. இவைபற்றி எல்லாம் கழகத் தோழர்கள் கவனம் செலுத்தவேண்டும். தொகுதிகளை வெட்டி ஒட்டி உருவை மாற்றிவிடுவதன்மூலம், அதனை ஒரு கட்சியின் செல்வாக்கிலிருந்து மற்றோர் கட்சியின் செல்வாக்கிற்குள் கொண்டுவந்துவிடமுடிகிறது; குறைந்தபட்சம் அதற்கான முயற்சியாவது நடைபெற வழி ஏற்பட்டுவிடுகிறது. இத்தகைய உள்நோக்கங்கள் பற்றி ஆராய்ந்தறிந்து, பொதுமக்களிடம் நாம் விளக்கிச் சொல்லவேண்டும், என்று மதியழகனிடம் கூறினேன். மே, இரண்டாவது மூன்றுவது வாரத்தில், தொகுதிக்குழு கூடும்போது, இதுபற்றி வாதாடும்படி, மதியழகனிடம் சொல்லியிருக்கிறேன். இந்தக் குழுவில், காங்கிரஸ் கட்சியினரே, பெருவாரியானவர்கள்; நமது கழக உறுப்பினர், இருவர் மட்டுமே. எனவே கழக உறுப்பினரின் கருத்துகள் ஏற்றுக் கொள்ளப் பட்டுவிடும் என்று உறுதி இல்லை. கடமையைச் செய்துவிட்டு, நிலைமையை மக்களிடம் எடுத்து விளக்கவேண்டும். காஞ்சிபுரம் தொகுதியைப் பொருத்தமட்டில், கீழ்கதிர்ப்பூர், மேல்கதிர்ப்பூர், விஷார் நரப்பாக்கம், விப்பேடு, திருப்பருத்திக்குன்றம், செவிலிமேடு, கோழிவாக்கம், அய்யங்கார்குளம், ஓரிகை. சின்ன அய்யங்குளம், தேனம்பாக்கம், நெல்வாய், தண்டலம், ஆரியம்பாக்கம், தொடூர், கூத்தரம்பாக்கம், பூண்டித்தாங்கல், காரை, ஈஞ்சம்பாக்கம், வேடல், இலுப்பப்பட்டு, ஆட்டுப்புத்தூர், சிறுவேடல், அத்திவாக்கம், ஆலப்பாக்கம், திருமல்பட்டு, மும்மல்பட்டு, சிங்காடிவாக்கம், களூர், ஏனாதூர், வையாவூர், உழவூர், ஆகிய ஊர்களை வெட்டி எடுத்து, சிலவற்றை உத்திரமேரூர் தொகுதியிலும், சிலவற்றை குன்றத்தூர் தொகுதியிலும் கொண்டுபோய் இணைத்துவிட்டிருக்கிறார்கள்.

இதுபோல, ஒவ்வொரு தொகுதியிலும் புகுத்தப் பட்டுள்ள மாறுதல்கள் குறித்து நமது கழகத் தோழர்கள் கருத்துடன் கவனித்துப் பார்க்கவேண்டும்.

தொகுதிகளைத் திருத்தி அமைப்பதிலே அரசியல் நோக்கமும், கட்சி நோக்கமும் இருக்கமுடியுமா என்று சிலருக்கு ஐயப்பாடு எழக்கூடும். இந்த இரண்டு நாட்களாக, இது சம்பந்தமான ஒரு நிலைமை, பத்திரிகைகளில் வந்தபடி இருக்கிறது. அது குறித்தும் இங்கு நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம்.

ஆட்சியிலே, கன்சர்வெடிவ் கட்சி இருந்திடும் போதுகூட, இலண்டன் மாநகராட்சி மட்டும், தொழிற் கட்சியிடமே இருந்து வருகிறது. இது கடந்த முப்பது ஆண்டுகளாக உள்ள நிலைமை. இந்த நிலைமையை, ஒருவிதமான தலைவலி என்று கன்சர்வெடிவ் கட்சி கருதிற்று; மாற்ற முனைந்தது. அதற்காக, இலண்டன் மாநகராட்சியின் தொகுதிகளை, விரிவுபடுத்தி, புதிய இடங்களைஇணைத்துப் புதிய தொகுதிகளை அமைத்தது. இவ்விதமாகப் பரப்பும் அமைப்பும் புதிதாக்கப்பட்டால், முப்பது ஆண்டுகளாக தொழிற்கட்சிக்கு இருந்துவரும் ஆதிக்கம் ஒழிந்துவிடும் என்பது கன்சர்வெடிவ் கட்சியின் எண்ணம். இந்த உள்நோக்கத்தை தொழிற் கட்சி மக்களிடம் எடுத்து விளக்கிற்று. சர்க்காரின்

விற்பனையாகிறது!

அண்ணாவின்
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம்
ரூ. 1-50

அரசாண்ட ஆண்டி
ரூ. 1-50

மதுரைக்கு டிக்கட் இல்லை
ரூ. 2-00

கிடைக்குமிடம்:
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

போக்கைக் கண்டித்தது. என்றுலும் இப்போது நடை பெற்ற தேர்தலில், இவ்வளவு திட்டமிட்டும், கன்சர் வெடிவ் கட்சி வெற்றி பெறவில்லை. மறுபடியும் தொழிற் கட்சியிடமே இலண்டன் மாநகராட்சி மன்ற ஆட்சி வந்து சேர்ந்தது.

இங்கு, தொகுதிகளைத் திருத்தி அமைப்பதால், ஏதேனும் தொல்லைகள் ஏற்பட்டாலும், நமது கழகம், முன்னதாகவே அவைகளைக் கணக்கெடுத்துபணியாற் றினுல், தொழிற் கட்சி வெற்றிஈட்டியதுபோல், வருகிற பொதுத் தேர்தலிலும் கழகம் வெற்றிபெற முடியும். எதற்கும் நிலைமைகளை நன்கு அறிந்துகொள்ள வேண் டும். தொகுதிகளைத் திருத்தி அமைப்பது பற்றிய பிரச்சினை பற்றிய பேச்சு, அடுத்த பொதுத்தேர்தல் பற்றியதாக வளர்ந்தது. பல தொகுதிகளைப் பற்றியும், பிரச்சார முறைகள் பற்றியும் விரிவாகப் பேசிக் கொண்டிருந்தோம்.

29—4—64

'அல்லும் பகலும்' என்ற புத்தகத்தைப் படித்து முடித்துவிட்டேன். ஏழைகள் அமைத்துக் கொண் டுள்ள குடிசைகளை அப்புறப்படுத்த, அடிமனைச் சொந் தக்காரர், போலீசின் உதவியைப் பெறுவதிலிருந்து துவங்கி, கைது, கலகம், சிறை, துப்பாக்கிச்சூடு, தப்பி ஓடுதல், என்னும் கட்டங்கள் கொண்டதாக, இந் தப் புத்தகம் அமைந்திருக்கிறது. பொதுவுடைமைக் கட்சியை ஆதரிப்பதாக இந்த ஏடு இருந்தபோதிலும், ஏழைகளின் உள்ளப்போக்கை அப்படியே படம் பிடித் துக் காட்டுவதில், மிகநேர்த்தியாக அமைந்திருக்கிறது. பொதுமக்களின் போக்கறியாத போலீஸ் அதிகாரி களின் நடவடிக்கைகளால், நிலைமை எப்படி எப்படி சீர்குலைகிறது என்பதனை, எவரும் ஒப்புக்கொள்ளத் தக்க விதமாக இந்த ஏடு எடுத்துக்காட்டியிருக்கிறது. நிகழ்ச்சி, அமெரிக்காவில் நடப்பதாகக் கதை. எனவே, கிருஸ்தவ மார்க்கத்தைப்பற்றியும் இதிலே இங்கும் அங்குமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. ஏழை களின் கஷ்டத்தைத்துடைக்க, தொழிற்சங்கம் நடத்து பவர்கள் பொதுவுடைமைக் கட்சியினர், மட்டுமல் லாமல், உண்மையான கிருஸ்தவர்களும், முனைந்து நிற்கிருர்கள். எங்களுக்குப் பொதுவுடைமைக் கட்சி யின் கோட்பாடும் தெரியாது, சட்ட நுணுக்கமும் புரி யாது, ஆனல் இதயம் இருக்கிறது, ஏழைபடும்பாடும் கஷ்டமும் புரிகிறது, அன்பு போதனைதான் கிருஸ்தவ மார்க்கம், எனவே ஏழைகளிடம் அன்புகாட்டுவது கிருஸ்தவரின் கடமை என்று உணருகிருேம், செய்கி ருேம், என்று ஏழைக்கு உதவுபவர்கள் பேசுவதாகக் குறிப்பிடும் பகுதி, உருக்கம் நிரம்பியதாக இருக்கிறது. ஏழ்மை, அறியாமை, பிணி, கொடுமை இவைகளிலே சிக்கி உழன்றபோதிலும், தொழிலாளர்களிடம், அக்ர மத்தை எதிர்த்துப் போரிடும் உணர்ச்சி உள்ளத்தின் அடித்தளத்திலே எப்போதும் கொழுந்துவிட்டு எரிந்த படி இருக்கிறது என்ற கருத்து நன்கு விளக்கப்பட்டி ருக்கிறது.

என் கைவலிக்கு இரண்டு நாட்களாகப் புதிய மருந்து போட்டுக்கொண்டு வருகிறேன். சிறை அதி காரிகளில் ஒருவர் சொன்ன யோசனை இது. இப்படிப் பட்ட வலி போக, தென்ன மரக்குடி எண்ணெய் தடவ வேண்டும் என்று சொன்னர். மாயவரத்திலிருந்து பரி மளம் அந்த எண்ணெய் கொண்டுவந்து கொடுத்திருக் கிருன். இரண்டு நாட்களாக, அதைத்தடவி, சுடுசோறு ஒத்தடம் கொடுத்துக்கொள்கிறேன். ஒரு வாரம் கழித் துத்தான், ஏதேனும் இதனல் பலன் இருக்கிறதா என் பது தெரியமுடியும்.

இரவு வலி எடுத்தால், புலித்தைலம் தடவிக்கொள் கிறேன். இன்றுகூட அந்த மருந்து தடவிக்கொண்டு, அது ஒருவிதமான விறுவிறுப்பை ஏற்படுத்தியதும், உறங்கச் செல்கிறேன்.

30—4—64

இன்று மாநகராட்சி மன்ற உறுப்பினர் கழகத் தோழர் சு. பாலன், ஏதோ கலவர வழக்கு சம்பந்த மாகக் கைது செய்யப்பட்டு, சிறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிருர் என்ற செய்தி அறிந்தேன். பாலனைப் பார்க்க இயலவில்லை. விரைவில் ஜாமீனில் போகக்கூடுமென்று கூறுகிருர்கள். உட்பகுதியில் இருப்பதாகத் தெரிகிறது. மாநகராட்சிமன்ற இடைத் தேர்தலின்போது கலாம் விளைவித்ததாக அவர்மீது வழக்கு தொடர்கிருர்களாம். நானும் பார்க்கிறேன், தேர்தல் கலவரம் காரணமாகக் கைது செய்யப்பட்டு, சிறைக்குக் கொண்டுவரப்பட்டவர்கள் அனைவரும் கழகத் தோழர்கள், அல்லது தொடர்புடையவர்கள் அல்லது ஆதரவாளர்கள் என்பவர்களாக இருக்கிருர் கள்–ஒரு காங்கிரஸ்காரர்கூட இல்லை. அவ்வளவு ஒழுங் காகத் திட்டமிட்டு கழகத் தோழர்கள் மீது பழி வாங் கப்படுகிறது, வீணன வழக்குகளிலே சிக்கவைப்பதும் போலீஸ் மூலம் தொல்லைகள் விளைவிப்பதும், கழகத் தோழர்களின் மனதில் பீதியைக் கிளப்பிவிடும், தொல்லை தாங்கமாட்டாமல், கழகத்தைவிட்டு விலகி விடுவார்கள் என்று ஆளுங்கட்சினரில் சிலர் நினைக்கக் கூடும். கழகத் தோழர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல என்பது எனக்குத் தெரியும். இதனல் அவர்கள் குழம் பிப் போகமாட்டார்கள். ஆனல் பொதுமக்கள் மன திலே இந்தப் போக்கு ஒருவிதமான கிலியை ஏற்படுத் தத்தான் செய்துவிடும். வீண் வழக்குகளைத் தொடுக் கும்போது, கழகம் பொதுமக்களிடம் முறையிட்டு, நிதி திரட்டி, வழக்காடவேண்டும். அவ்விதம் செய்ததில் பலமுறை நமது கழகத் தோழர்கள்மீது தொடரப் பட்டவழக்குகளை, நீதிமன்றங்கள் தள்ளிவிட்டிருக் கின்றன — கழகத் தோழர்கள் குற்றமற்றவர்கள் என்பது மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஷேக் அப்துல்லா, பண்டித நேருவைச் சந்தித்துப் பேசிடும் நிகழ்ச்சி குறித்த செய்தியை மிக்க ஆவலோடு படித்துக்கொண்டிருந்தோம்.

பேச்சின் விளைவு எப்படி இருக்கும் என்பது உடனடியாகக் கூறிவிடக் கூடியது அல்ல என்றாலும், காங்கிரஸ் கட்சியின் மேல்மட்டத்தின் மனப்போக்கு என்ன என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது; டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் பேச்சு இதனை நன்கு புரியும்படிச் செய்துவிட்டிருக்கிறது.

ஷேக் அப்துல்லா, வருவதற்கு முன்னதாகவே, பல ஆயிரக்கணக்கான மக்கள் கொண்ட ஒரு ஆர்ப்பாட்ட அணிவகுப்பு, பாராளுமன்றத்தின் முன்பு நடத்தப்பட்டிருக்கிற செய்தியைப் பார்த்தோம். அந்த அணிவகுப்புக்கு, காஷ்மீரைச் சார்ந்த ஜனசங்கத் தலைவர் தோக்ரா தலைமை வகித்திருக்கிறார்; அப்துல்லாவைச் சிறையில் தள்ளு! என்பது அணிவகுப்பின் முழக்கங்களில் ஒன்று.

இந்தப் பின்னணிக் கீதத்துடன், சமரசப் பேச்சு தொடங்கியிருக்கிறது.

எனக்குத் தெரிந்தவரையில், ஷேக்அப்துல்லாவிடம், பண்டிதரும் ஆளுங்கட்சியினரும் பேசுவதற்கு முன்பாகவே, ஜெயப்பிரகாஸ் நாராயணும், வினோபாவும், பேசி, ஒரு சமரசத் திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும்—அந்த சமரசத் திட்டத்தின்மீது, பண்டிதருடன் பேச்சு நடத்தவேண்டும் என்றாலும், பண்டித ஜவகர்லால் நேரு, இந்தப் பிரச்சினையை அதற்குத் தேவையான நிதானத் தன்மையுடன் பரிசீலிப்பார் என்று நம்புகிறேன். ஒரு வாரத்தில் இது பற்றிய வடிவம் ஓரளவுக்குத் தெரியக்கூடும்என்று எண்ணுகிறேன்.

கம்யூனிஸ்டு கட்சியிலே ஏற்பட்டுவிட்ட 'பிளவு' விரிவாகிவிட்டதற்கான நிகழ்ச்சிகள் பெருகிவிட்டிருக்கின்றன. இருசாராருமே, கம்யூனிஸ்டு கட்சி என்ற பெயருடன், இரண்டோர் ஆண்டுகள் வேலை செய்வார்கள்போலத் தெரிகிறது. இது பொதுமக்கள், சந்தித்தாக வேண்டிய புதிய குழப்பமாகிவிடுகிறது. கம்யூனிஸ்டு கட்சியின் எதிர்ப்பு காங்கிரஸ் கட்சியை அடுத்த பொதுத் தேர்தலில் வெகுவாக ஒன்றும் செய்யாது என்ற எண்ணம் இப்போதே காங்கிரஸ் வட்டாரத்திலே எழும்பிவிட்டது. இதனை எடுத்துக்காட்டுவது போல, கேரள முதலமைச்சர் சங்கர் பேசிய பேச்சு பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. கட்டுக்கோப்பான கட்சி, முறை நிரம்பிய கட்சி, தனித் தலைவர்களை நம்பாமல், அமைப்புக்கே முதலிடம் தரும் கட்சி, பிரச்சினைகளை விவாதிப்பதிலே துளியும் சளைக்காத கட்சி, வெளியே பிளவுகள் தெரியஒட்டாமல் தன்னைத்தானே கட்டிக்காத்துக்கொள்ளும் கட்சி என்றெல்லாம் பெருமை பேசுவார்கள் கம்யூனிஸ்டு கட்சியைப்பற்றி. நமது கழகத் தோழர்களிலே சிலருக்குக்கூட, கம்யூனிஸ்டு கட்சிபோல, முறையோடு நமது கழகம் இயங்க

பொங்கல் மலர்
சந்தாதாரர்கள் கவனத்திற்கு

காஞ்சி பொங்கல் மலர் விலை ரூ. 1—50 ஆகும். முன் பணமாக ரூ. 1—50 அனுப்புகின்ற சந்தாதாருக்கு மட்டும்தான் மலர் அனுப்பப்படும்.

உரிமையாளர்:
இளங்கோவன்.

வேண்டும் என்று கூறுவதிலே ஆர்வம் பொங்குவது உண்டு. இப்போது கம்யூனிஸ்டு கட்சியிலே ஏற்பட்டுவிட்ட நிலைமையைப் பார்த்த பிறகு, அந்தக் கட்சியை நடத்தி வரும் முறையில் என்னென்ன கோளாறுகள் உள்ளன என்பதனைத் தோழர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். இது குறித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது நான் சொன்னேன், நாம், இரண்டு வெவ்வேறான நிலைமைகளையும் சந்தித்திருக்கிறோம்—சமாளித்திருக்கிறோம்,-குழப்பம் ஏற்படாதபடி பார்த்துக்கொண்டிருக்கிறோம்—இறுதியில் வெற்றியும் பெற்றிருக்கிறோம். திராவிடர் கழகத்திலிருந்து நாம் வெளியேறினோம்—சிறுபான்மையினர் அல்ல — நாம் விரும்பி இருந்தால், திராவிடர் கழக அமைப்பே நம்முடைய நிர்வாகத்தில் வரவேண்டும் என்று வாதாடி இருக்கலாம்-சிலர் என்னிடம் அதுபோல வற்புறுத்தியும் பார்த்தார்கள்—ஆனால், நாம் வாதிடுவது, வழக்கிடுவது, வம்புவல்லடிக்குச் செல்வது என்பவைகளிலே காலத்தையும் கருத்தையும் செலவிட்டுப் பாழடிப்பதைவிட, நமக்குப் பிடித்தமான கொள்கைகளுடன் ஒரு புதிய அமைப்பு ஏற்படுத்திக்கொண்டு, நமது அறிவாற்றலை அந்த அமைப்பின் வெற்றிக்காகப் பயன்படுத்தி வருவோம்-நம்முடைய நோக்கம் தூய்மையானதாக இருந்தால் பொதுமக்கள் ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்று திட்டமிட்டுத் திராவிடமுன்னேற்றக் கழகம் என்ற புதிய அமைப்பைத் துவக்கித் தொண்டாற்றினோம்—வெற்றியும் பெற்றோம். எங்களுடையதுதான் உண்மையான திராவிடர் கழகம் — பழயவர்களிடம் இருப்பது போலி திராவிடர் கழகம் என்ற வம்பிலே நாம் ஈடுபடவில்லை. எனவேதான், இத்துணை ஏற்றத்துடன் நமது கழகம் இன்று ஒளிவிடுகிறது. ஒரு அமைப்பிலிருந்து பிரிந்து வந்து, புதிய அமைப்பு துவக்கி அதனை ஏற்றமடையச் செய்வதிலே வெற்றிபெற்றோம். அதுபோலவே, நமது அமைப்பிலிருந்து சிலர் விலகினார்கள் — விசாரப்பட்டோம், ஆனால் விரோதத்தைக் கக்கிக்கொண்டிருப்பதிலேயே, காலத்தைப் பாழாக்கிக்கொள்ளவில்லை — நிதானம் இழக்காமல் நெறிதவறாமல், பணியாற்றிவந்தோம்,

நமது அழைப்பு, புதிய வலிவுடனும் பொலிவுடனும் இன்று இயங்குகிறது.

ஆக, இரு வேவ்வேறான நிலைமைகளிலும், நாம் நம்முடைய நோக்கத்தின் தூய்மை காரணமாகவும், தொண்டின் நேர்த்தி காரணமாகவும், வெற்றி பெற்றோம்.

திராவிடர் கழகத்திலிருந்து நாம் பிரியும்போது' நமக்கு இருந்த நிலைமை நமக்கும் நாட்டுக்கும் புரியும்' கழகத்தின் நிர்வாகத்தில் ஒரு நகராட்சிகூடக் கிடையாது. தி. மு. கழகமாக வளர்ந்து, சட்டசபையில் 15-இடங்கள், பாராளுமன்றத்தில் இரண்டு இடங்கள், சென்னை மாநகராட்சி நிர்வாகம் எனும் இவைகளைப் பெற்றோம், நாங்கள்தான் உண்மையான திராவிடர் கழகம் என்ற வம்பு வல்லடியில் ஈடுபட்டிருந்தால் என்ன கிடைத்திருக்கும், வளர்ச்சி எந்த முறையில் இருந்திருக்கும் என்பதை நான் சொல்லத் தேவை இல்லை.

திராவிட முன்னேற்றக் கழக வெற்றி, திராவிடர் கழகத்தை முறையாக நெறியாக நடத்தினால், எத்தகைய அரசியல் நிலையை உருவாகி இருந்திருக்கும் என்பதை, அரசியல் அறிந்த அனைவரும் அறிந்துகொள்ளச்செய்தது. நிதானத்துடனும், பொறுமையுடனும் பொறுப்புடனும் செயலாற்றுவதற்குப் பலன்கிடைத்தே தீரும் என்ற பாடத்தைப் பலரும் பெறச்செய்தது.

திராவிட முன்னேற்றக் கழத்திலிருந்து சிலர் பிரிந்து போயினர்—திட்டமிட்ட விளம்பர பலத்துடன் புதிய அமைப்பு கண்டனர் — வழக்கம்போல, தி. மு. கழகத்தின் முதுகெலும்பு முறிந்துவிட்டது, ஜீவன் போய்விட்டது, என்று பத்திரிகைகள் பாடிவிட்டன. நாமோ, பகைக்காமல், பதறாமல், வியர்வையைப் பொழிந்து பணியாற்றினோம்; பிரிந்தவர்கள் நம்மோடு இருந்தபோது சட்டசபையில் நாம் 15—அவர்கள் போனபிறகு சட்டசபையில் நாம் 50—பாராளுமன்றத்தில் முன்பு 2—இப்போது 8—மீண்டும் சென்னை மாநகராட்சி நிர்வாகம் நம்மிடம்—புதிதாகப் பத்துக்கு மேற்பட்ட நகராட்சிகள் நம்வசம்.

நாம் ஒரு அமைப்பிலிருந்து பிரிந்துவந்தபோதும் சரி, நமது அமைப்பிலிருந்து சிலர் பிரிந்து சென்றபோதும் சரி, நாம் நமது பாதையை ஒழுங்காக்கிக் கொண்டு, மனிதப்பண்பை இழக்காமல், நம்பிக்கையுடன் நெறியாகப் பணியாற்றி வெற்றி பெற்றிருக்கிறோம்.

இதுபற்றி இங்கு நான் எடுத்துச்சொன்னபோது நண்பர்கள் மெத்த மகிழ்ச்சி அடைந்தார்கள்.

1—5—64

மேதினி போற்றிடும் மேதினம். வெளியே இருந்திருந்தால், ஏதேனும் ஓரிடத்தில் மேதினம்பற்றிப் பேசி இருப்பேன். இந்த ஆண்டு மேதினம், இல்லாமை, அறியாமை எனும்கொடுமை நிரம்பிஉள்ள காரணத்தால், சூழ்நிலை பாழாகி, கழுத்தறுப்பவன் கன்னம் வைப்பவன், கைகால் ஒடிப்பவன் பூட்டு உடைப்பவன், கள்ளச் சாராயம் காய்ச்சுவோன் கத்தரிக்கோல்போடுவோன் என்னும் இன்னோரன்ன பிற, வழி தவறிய மக்களை அடைத்து வைத்திருக்கும் சிறைச்சாலையில், ஒரு கொட்டடியில் இருந்துகொண்டு, இருக்கின்றேன். இங்கு நான் பார்க்கிறேன், நடத்திச் செல்பவர்கள் அமையாத காரணத்தாலேயே கெட்டவழி சென்றுவிட்டவர்களை மீண்டும் சமூகத்தில் இடம் கிடைக்காது என்று மனம் ஒடிந்துபோய், 'கைதி ஜாதி'யில் சேர்ந்துவிட்டவர்களை, இங்கு உள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட கைதிகளில், ஏ. பி. வகுப்புக் கைதிகள் தவிர, மற்றவர்கள் சொந்தத்தில் வீடுவாசல், தொழில் ஏதுமற்ற ஏழ்மை நிலையினர், வயிறாரச் சாப்பிட்ட நாட்கள் மிகக் குறைவாகத்தான் இருந்திருக்கும். குடிசையிலே வாழ்ந்தவர்களே பெரும்பகுதியினர்.

சமூகத்திலே ஒரு பிரிவினர் இதுபோலாகாதபடி தடுத்திட, சமூக அமைப்பிலேயும் பொருளாதார அமைப்பிலேயும் புரட்சிகரமான மாறுதல் செய்யப்படவேண்டும் என்ற கருத்தை உலகம் உணர்ந்திடச் செய்வதிலே மேதினம் பெருமளவு வெற்றி பெற்றிடுகிறது.

வெளியே இல்லையே இந்தத் திருநாளைக் கொண்டாட என்று ஒருகணம் எண்ணினேன்—ஏக்கத்துடன். —மறுகணமோ, இல்லை, இல்லை, இன்று வெளியே இருந்து கடற்கரைக் காற்றின் இனிமையைப் பெற்றுக் கொண்டே பாட்டாளிபடும்பாடுகள்பற்றிப் பேசுவதைவிட, பாட்டாளிகளாகவும் இருக்க முடியாமல், வழி தவறி கெட்டு, கைதிகளாகிவிட்டுள்ளவர்கள் அடைபட்டுக்கிடக்கும் சிறையில் இருந்துகொண்டுதான் மேதினம்பற்றிச் சிந்திக்கவேண்டும் — அதுதான் பொருத்தம் என்று எண்ணிக்கொண்டேன்.

காஞ்சி' சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா	ரூ. 10—00
ஆறுமாத சந்தா	ரூ. 5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

பாட்டாளிகளின் மனப்பான்மையில் புரட்சிகர மான மாறுதல் ஏற்படும் முறையில் பிரசாரம் செய்வதில் நாம் முனைந்திருந்தபோது, அந்தப் பிரசாத்தை நாத்தீகப் பிரசாரம் என்று கூறிப் பலரும் தாக்கிவந்த நிலைமைபற்றி நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். தொழிலாளர்களிடம் மேலும் அதிகமான அளவு தொடர்புகொள்ளவேண்டும், புதியபுதிய தொழிற் சங்கங்கள் அமைக்கவேண்டும் என்பதுபற்றி அன்பழகன் வலியுறுத்தினர். இப்போது, நமது கழகத் தோழர்களில் குறிப்பிடத்தக்க சிலர், இந்த முனையில் நல்ல பணியாற்றிக்கொண்டு வருகிருர்கள் என்பது குறித்து மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டிருந்தோம்.

2—5—64

இன்று, தொகுதி திருத்தி அமைக்கும் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளத்தக்க முறையில், தன் விடுதலை நாள் அமையுமா என்று அறிந்துகொள்ள மதியழகன் சிறை மேலதிகாரியிடம் பேசிவிட்டு வந்தார். குறிப்பிட்டு ஏதும் சொல்ல அதிகாரி மறுத்துவிட்டாராம். மேலும் சிறை அதிகாரிகளின் நோக்கம், விடுதலை நாளை முன்கூட்டித் தெரிவிக்கக்கூடாது—சிறை வாயிலில் வரவேற்புகள் நடக்கவிடக் கூடாது என்பதாக இருப்பதாகத் தெரிகிறது. விடுதலை, எதிர்பாராத முறையில் இருக்கும் போலத் தெரிகிறது, எப்படியும், குழுக்கூடத்தில் கலந்துகொள்ள வசதி கிடைக்கும் என்று மட்டுமே கூறமுடியும் என்று சிறை அதிகாரி கூறியதிலிருந்து, மதி, மே முதல் வாரம் முடிவடைவதற்குள் விடுதலை செய்யப்படலாம்என்று கருதுகிறேன்.

சிறைவாயிலில் வரவேற்பு நடத்தவிடக் கூடாது என்று ஏன் எண்ணவேண்டும், இது என்ன போக்கு என்று நண்பர்கள் வருத்தப்பட்டுக்கொண்டார்கள்.இது போன்ற பல பிரச்சினைகளில், இன்றைய ஆட்சியினர் கலியாணத்தைத் தடுக்க சீப்பை ஒளித்துவைத்த புத்திசாலியாகத்தான் நடந்துகொள்கிருர்கள் என்று நான் சமாதானம் கூறினேன்.

உலகத் தொழிலாளர்களை ஒன்றுபடுத்தும் திருநாள், மே தினம். இந்த ஆண்டு இந்தத் திருநாளில், கம்யூனிஸ்டு கட்சியினர், இரு பிரிவுகளாகி, தனித்தனியாக மே தினம் கொண்டாட வேண்டி ஏற்பட்டுவிட்டிருப்பது வருந்தத்தக்க நிகழ்ச்சியாகும். தொடர்ந்து இந்த நிலை இருக்கும் என்பது, கம்யூனிஸ்டு தலைவர்களின் பேச்சிலிருந்து தெரிகிறது.

கம்யூனிஸ்டு கட்சியின், எந்த ஒரு பிரிவுக்கும் தமது ஆதரவை அதிகாரபூர்வமாக, நண்பர் ம. பொ. சி. அளிக்கவில்லை என்ருலும், இந்த மே விழாத் தொடர்பான கூட்டத்தில்—ஓட்டல் தொழிலாளர் மாநாட்டில்—ராமமூர்த்தியுடன் இணைந்து, கலந்துகொண்டிருக்கிருர். காங்கிரஸ் கட்சி எதேச்சாதிகாரத்தை வளர்ப்பது பற்றிக் கண்டித்துப் பேசி, காங்கிரசிடம் உறவு கொண்டாடி சந்தர்ப்பவாதிகள் சலுகைகளைப் பெறுவதையும் எடுத்துக்காட்டி இருக்கிருர். ம. பொ. சி.யின் இந்தப் போக்கு எந்த முறையிலும், அளவிலும், இனி வளரும் என்பது தெரியவில்லை. போகப் போகத்தான் தெரியும் என்று எண்ணுகிறேன்.

சோஷியலிஸ்டு கட்சியின் ஒரு பிரிவினர், ராமமூர்த்தியின் கம்யூனிஸ்டு பிரிவுடன் இணைப்பு ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்கக்கூடும் என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இந்த நிலைமையும், உறுதியான வடிவம் பெறுமா என்பது புரியவில்லை.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில், மறியலில் ஈடுபட்ட, கழகத் தோழர்களை, துரிதமான விசாரணை நடத்தி, மூன்றுமாதக் கடுங்காவல் தண்டனை விதித்துவிட்டிருக்கிருர்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் சண்முகம், ராஜாங்கம், தங்கவேல், மூவரும் சிறை புகுந்துள்ளனர்.

இதுபோல உடனுக்குடன் விசாரணை நடத்தி, வழக்குகளை முடித்துவிடாமல், மதுரையிலும் காஞ்சிபுரத்திலும் காலத்தை நீடித்துக்கொண்டே போவதும், தோழர்கள் ‘காவலில்’ வாட்டப்படுவதும் வருந்தத்தக்கதாக இருக்கிறது என்பதுபற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

எப்படியும், நான் விடுதலை ஆவதற்குள், நண்பர் கோவிந்தசாமியும் மற்றவர்களும், சென்னை சிறைக்குக் கொண்டுவரப்படுவார்கள் என்று கருதுகிறேன்.

இன்று ராணியுடன் என் இரண்டு மருமகப்பெண்களும், என்னைப் பார்க்க வந்திருந்தார்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் நலன்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

அண்ணன்,

அண்ணாதுரை

விற்பனையாளர்களுக்கு

மணியாடர், செக், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி" அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப்பிட்டு எழுதவும்.

உரிமையாளர்
"காஞ்சி"
சின்ன காஞ்சிபுரம்.

உலகம் பொல்லாதது

உலகம் பொல்லாதது! சொல்லாதவர்யார்? ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேளையில் இந்த உலகத்தைப் பொல்லாத உலகம் என்று பழித்திருக்கிறோம். உலகம் முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டு, இதிலே உள்ள மலை உயரம் போதாது, ஆறு நீளம் போதாது, கடல் நீரில் உப்பு போதாது, மண்ணிலே வளம் காணாது என்று அளந்து பார்த்துவிட்டு அப்புறம் இந்த உலகம் பொல்லாதது என்று சொல்லவில்லை. இருந்த இடத்தில் இருந்துகொண்டு, உலகத்தின் ஒரு மூலையை மட்டும் பார்த்துவிட்டு உலகம் பொல்லாதது என்று சொல்லிவிடுகிறோம். கத்தரிக்காயைப் பார்த்து நன்றாக இல்லை என்று சொல்வது மாதிரி, உலகம் பொல்லாதது என்று சொல்கிறோம். கத்தரிக்காயைக்கூட முற்றல்,புழுத்தல் இருக்கிற பகுதியைச் சீவித் தள்ளிவிட்டு மற்றபகுதியைப் பயன்படுத்திக் கொள்கிறோம், ஆனால் இத்தனை பெரிய உலகத்தில் ஒரு துளியைப் பார்த்துவிட்டு பொல்லாதது என்கிறோம்; உலகமும் அதை ஏற்றுக்கொள்வதுபோல் சும்மாவே இருக்கிறது. பதில் பேச முடியாததால் உலகம் சும்மா இருக்கிறதா? இல்லை! உலகம் நினைத்தால் பேசும்! ஆனால் உலகத்திற்குத் தெரியும், உலகம் பொல்லாதது என்னும்போது நாம் உலகத்தைச் சொல்லவில்லை, அதிலே உள்ள மக்களைச் சொல்கிறோம் என்பது! "நீ இப்படியெல்லாம் நடந்து கொள்வதைப் பார்த்து ஊர் சிரிக்கிறது" என்று சொல்லும்போது ஊரில் உள்ள மக்கள் தாம் சிரிக்கிறார்களே தவிர, ஊர் சிரிப்பது இல்லை என்பது நமக்கு எப்படித் தெரிகிறதோ, அதைப்போல, உலகம் பொல்லாதது என்னும்போது, தன்னைச் சொல்லவில்லை, தன்னிலே இருக்கும் மக்களைத்தான் சொல்கிறார்கள் என்பது உலகத்திற்குத் தெரியாதா என்ன? எவ்வளவு வயது ஆகிறது உலகத்திற்கு, இந்த அநுபவ அறிவு கூடவா இல்லாது போகும்?

தெருவிலே முள்ளங்கி விற்பனைக் கூப்பிடுவதற்கு, "ஏ முள்ளங்கி" என்கிறோம். அவனும் திரும்பிப் பார்த்து "இதோ வந்தேன்;' என்கிறானே தவிர, "என்னைய்யா இது அக்ரமம்? எனக்குப் பெயர் இருக்கிறது முத்தன் என்று அழகாக, அதை விட்டுவிட்டு முள்ளங்கி என்று கூப்பிடுகிறாயே நியாயமா?" என்று சண்டைக்கு நிற்கவில்லை.

"த"

அவன் பெயர் முத்தனாக இருந்தாலும், முள்ளங்கிக் கூடை தலையிலே இருக்கும்போது அவன் முள்ளங்கியாகிறான். கூடையை இறக்கி வைத்துவிட்ட பிறகு அவனை நாமும் முள்ளங்கி என்று கூப்பிடப் போவது இல்லை, கூப்பிட்டாலும் அவன் திரும்பிப் பார்க்கமாட்டான்.

தமிழ் இலக்கண ஆசிரியரைக் கேட்டால், "இதுதான் ஆகுபெயர்" என்பார். ஆகு பெயரா, அதென்ன ஆகுபெயர், ஆகாப் பெயர் என்று திகைத்தால், அவரே விளக்கம் சொல்வார். ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய ஒன்றனுக்கு ஆகிவருவது ஆகுபெயர் என்பார். ஒரு பொருளின் பெயரை இன்னொன்றுக்கு எத்தனையோ வகையில் சொல்கிறோம். விளக்கு என்றால் எரிகின்ற சுடருக்குத்தான் பொருள்; அதைத்தான் குறிக்கும். ஆனால் விளக்கு ஒடிந்தது என்னும்போது எரிகின்ற சுடர் (ஜோதி) ஒடிந்தது — என்றல்ல பொருள், அந்தச் சுடரைத் தாங்கிக்கொண்டிருக்கும் தண்டு (விளக்கின் தண்டு) ஒடிந்தது என்பது பொருளாகிறது. இப்படி எத்தனையோ, ஆகுபெயர்களை நாம் தெரிந்தும் தெரியாமலும் (பெயர் தெரியாமலே) சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதிலே ஒன்றுதான் உலகம் பொல்லாதது என்பதும்.

நேற்று பொல்லாதது என்ற உலகத்தை இன்று நல்லது என்று பாராட்டுவோம். ஒரே நேரத்தில் இரண்டு விதமான கருத்துக்களையும் கூறுவதுகூட உண்டு.

எனக்கு நல்லதாக இருக்கும் ஒன்று, இன்னொருவருக்குத் தீயதாகிறது. பாகற்காயைக் கசப்பு என்று நான் உண்பது இல்லை. ஆனால் காய்கறிகளில் உள்ள சத்துபற்றியும் மருந்துத் தன்மை பற்றியும் அறிந்த ஒருவர் அதை விடுவது இல்லை. தமிழ்ப்பற்று இருக்கிற ஒருவரிடம் 'இந்தி வருகிறதே' என்றால் அவர் குமைகின்றார். என்ன செய்வது என்று தெரியவில்லையே என்கிறார். தாய்மொழிக்கு ஆபத்து வருமே என்ற கவலையில் மனம் உடைந்து போகிறார். மொழியாவது மண்ணாவது, எல்லாம் பிழைக்கிற வழியில் இருக்கிறது எள்று நினைக்கும் ஒருவரிடம் இந்தி வருகிறது என்றால், ஆமாம் சனவரி 26 முதல் வருகிறது. தெரியுமே எனக்கு என்று, ஏதோ ரயில் வருவதைச் சொல்வதுபோல் ஒரு கவலையும் இல்லாமல் சொல்கிறார்.

நேற்று வரையில் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவியவர்கள், இன்று எட்டி எட்டி நிற்கின்றனர்; எட்டி நின்றவர்கள் இன்று கிட்டி வந்து விருந்துண்டுவிட்டு வெற்றிலை போட்டுக் குதப்பியவண்ணம் ஊரார் குறைகளைப் பேசிக்கொண்டிருக்கின்றனர். என்ன காரணம்? நிலைமை, நினைப்புதான். இதே நிலை நாளையும் இருக்குமா, என்றால் எப்

படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?

உலகம் தன்னைத்தானே சுற்றிச் சுழன்றுகொண்டிருக்கிறது; அதே நேரத்தில் சூரியனையும் சுற்றிக் கொண்டிருக்கிறதாம். அப்படியானால் நேற்று இருந்த இடம் இன்று மாறலாம்; இன்று இருப்பது நாளை திரியலாம். கீழது மேலாகலாம்; மேலது கீழாகலாம், நல்லது பொல்லது ஆகலாம்; பொல்லது நல்லது ஆகலாம்,

நமது நிலையையும் பொருத்தே எதனையும் நல்லது என்றும் தீயது என்றும் கூற முடியும். கார் நல்லதுதான், வசதியானது கூடத்தான். ஆனால் நம்முடைய பொருளாதார நிலை என்ன என்பதைப் பொருத்துத்தானே, அது நல்லதா இல்லையா என்று சொல்ல முடியும்? கையிலே நாலு காசு மிச்சமாக இருந்து வேறு செலவும் இல்லாதிருந்து கார் வைத்துக்கொண்டால் நல்லதுதான். கடன் தொல்லை கழுத்தைப் பிடித்துக்கொண்டிருக்க, கடனுக்கு மேல் கடனாக வாங்கிக் கார் வாங்கினால் அது எப்படி நல்லதாக முடியும்?

தைலம் நல்லது என்பதற்காகத் தலைவலி இல்லாதபோதுகூட தடவிக்கொள்ள முடியுமா என்ன? என்னய்யா, தைலம் தடவிக்கொள்கிறாயே, தலைவலியா என்று கேட்டால், வலியும் இல்லை, ஒன்றும் இல்லை. தைலம் கிடைத்தது, அதுவும், உயர்ந்த தைலம், சும்மா கிடைத்தது தடவிக்கொள்கிறேன் என்றால், சொல்கிறவனைப் பற்றி என்ன நினைப்போம்.

எருக்கம்பூவும், மருந்துக்குத் தேவைப்படும்போது நல்லதாகிறது; மல்லிகையும் வேண்டாதபோது தீயதாகிறது.

உலகத்தில் நல்லதும் இருக்கிறது தீயதும் இருக்கிறது. பகுத்துணர்ந்து தேவைப்படுவதைக் கொள்வதுதான் அறிவுடைமை. பகலும் இருக்கிறது, இரவும் இருக்கிறது என்பதை மறத்தற்கில்லை. ஒளியும் இருளும் இணைந்தே உள்ளன. ஒன்றை ஒன்று ஒட்டியே வருகின்றன. பகல் ஒளியைக் காணும்போது உலகமே ஒளிமயமானது என்று முடிவு கட்டிவிடக்கூடாது; அடுத்து இருள்வரும்போது வழி காட்டுவதற்குத் தேவை என அகல் விளக்கைத் தேடிவைத்துக்கொள்ள வேண்டும். நடுநிசியில் எழுந்து உட்கார்ந்துகொண்டு, உலகமே இருளில் கிடக்கிறது. என் வாழ்வில் எப்படி ஒளி கிடைக்கும் என்று ஒடுங்கிப்போகவும் கூடாது. விடியும் என்று நம்பி உறங்கினால், விடிகிறது.

இருளில் தோன்றும் நம்பிக்கையாகவும், இருட்டை விளக்கும் அகல்விளக்காகவும் இருந்து பயன்படுபவை சான்றோர்களின் அறவுரைகளேயாகும். உடல் தளர்ச்சிக்குக் கோல் ஊன்றிக்கொள்ள உதவுகின்றது; உள்ளத் தளர்ச்சிக்குத் துணையாவது சான்றோரின் அறிவுரைகளே ஆகும். அந்தத் தெளிவு தோன்றுமானால் உலகம் பொல்லாதது என்று தூற்றிக்கொண்டிருக்கத் தேவையில்லை.

ஒரே தெருவில்உள்ள இரண்டு வீடுகளில், ஒன்றில் சாப்பறை கேட்கிறது; மற்றொன்றில் மணமுரசு ஒலிக்கிறது. ஒரு வீட்டில் அழுகுரல் அலை அலையாக எழுகிறது; மற்றொன்றில் ஆரவார ஒலி அலையோசைபோல் கேட்கிறது.

ஒரே தெருவில், ஒரே ஊரில், ஒரே உலகத்தில் இப்படிப்பட்ட காட்சிகள் ஏராளமாக உள்ளன. இப்படிப்பட்ட நிலையில் உலகத்தின் வாழ்வு இருப்பதினால் உலகம் பொல்லாதது என்கிறோம். ஒரு முறைக்கு ஒன்பது முறை ஓராயிரம் முறைகள் சொன்னாலும், உள்ளது உள்ளதுதான்; உலகம் பொல்லாததுதான். சொல்லிக்கொண்டிருப்பதினால் மட்டும் என்ன பயன்?

“ஐயோ, நெருப்பு, நெருப்பு” என்று கூவிக்கொண்டிருந்தால் நெருப்பு நீராகிவிடுமா? தண்ணீர் கொண்டுவந்து ஊற்றி அணைத்தால்தான் நெருப்பு நீறு ஆகும். தண்ணீர் இல்லை என்றால், கொஞ்சம் தள்ளியாவது நின்றுகொள்ள வேண்டும். அதைவிட்டுவிட்டு “நெருப்பு நெருப்பு” என்று நெஞ்சுருகக் கூவுவதனால்மட்டும் என்ன பயன்? நோய் வந்துவிட்டது, வந்துவிட்டது என்றால் மட்டும் போதாது, மருந்தும் உண்ணவேண்டும். அப்போதுதான் நோய் நீங்கும் இல்லையேல், நோய்த் துன்பம்மட்டும் அல்லாமல், நோய் நோய் என்று நொந்துகொள்ளும் துன்பமும் சேர்ந்துகொள்ளும்.

உலகம் பொல்லாததுதான். அதைப்பற்றி இனி எண்ணி என்ன செய்வது? “ஏன் பிறந்தேன்?” என்று பிறந்ததற்குப் பின் பாடி என்ன லாபம்? பிறந்தாகிவிட்டது, இனி எப்படிப் பயனுடைய வாழ்வு வாழலாம் என்று எண்ண வேண்டும்.

உலகம் பொல்லாதது, அது தெரிகிறது. தெரிந்து சொல்லிக் கொண்டிருந்தால்மட்டும் போதாது. இன்னாத இந்த உலகத்தில் இனியது காணல்வேண்டும். அதுவே செய்யத்தக்கது. அதைவிட்டுவிட்டு உலகம் பொல்லாதது என்பதைப் பல்லவியாக்கிப் பண்ணிசைப்பதிலே பயனேதும் இல்லை.

முள் இருக்கிறது, அதைத் தள்ளித்தான் ரோசாவைக்கொள்ள வேண்டும்; உமி இருக்கிறது, அதை நீக்கித்தான் அரிசியைக்கொள்ள வேண்டும். துன்பம் இருக்கிறது அதற்கிடையில்தான் இன்பத்தைக் காணவேண்டும்.

இந்தஉண்மைகளை, **பக்குடுக்கைக் நன்கணியார்** என்னும் புலவர் 'அழகாகச் சொல்கிறார், புறநானூறு நூற்றித் தொண்ணூற்றி நாலாம் பாட்டில். பாட்டு என்னமோ சின்னதுதான், புலவருடைய பெயர்கூட ஒன்றும் அறிமுகம் ஆன பெயராக இல்லை. ஆனால் அவர் கூறியுள்ள கருத்தோ, மிகப் பெரியதாகவும் அருமையுடையதாகவும் காணப்படுகறது.

ஓர் இல்நெய்தல் கறங்க (துன்பப் பாட்டு ஒலிக்க) ஓரில் ஈர்ந்தண் முழவின் (மங்கலமுரசின்) பாணிததும்ப புணர்ந்தோர் பூஅணி அணிய, பிரிந்தோர் பைதல்உண்கண் பனி வார்பு உறைப்ப (கண்ணீர் சிந்த) படைத்தோன், மன்றப் பண்பிலாளன்-இன்னாது அம்ம இவ்வுலகம் இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே—என்பது பாட்டின் போக்கு. உலகம் பொல்லாதது என்பது தெரிந்துதான். தெரிந்தவர்கள், இந்தப் பொல்லாத உலகத்தில் நல்லதைக் காண்க என்று வாழும் வழியைக் கூறுகின்றார்.

புகழ்மணம் மிக்க புலவர்கள் காட்டும் வழியைப்போலவே, புகழ்மணம் பெறாத பக்குடுக்கை நன்கணியார் கூறும் நெறியும் நன்னெறியாக அமைந்திருக்கக் காண்கிறோம். புறநானூறு என்னும் கருவூலத்தில் புதைந்து கிடக்கும் மணிகள், இப்படி எத்தனையோ! கிடக்கும் அம்மணிகளைக் கிடைக்கப் பெறுவோம்.

போட்டி வியாபாரம்

"டாண் டாண்" மணி ஒலித்தது. 'வீட்டிற்குப் போகலாம் என்று ஆசிரியரின் விடை கிடைத்தது. அவிழ்த்துவிட்ட மூட்டையினின்றும் சிதறிஓடும் நெல்லிக்காய்களைப் போல முதுகின்மீது பைகளைப் போட்டுக்கொண்டு மாணவர்கள் ஓட்டம் பிடித்தனர். அவர்கள் 'வீடு நோக்கி' ஓடவில்லை, ஆனால் பள்ளிக்கூடத்திற்கு எதிரில் இருந்த புத்தகக் கடையை நோக்கி ஓடினர். சிறு வயதில் ஒரு நல்ல பழக்கம் இருக்கிறது. திறந்து படிக்கிறார்களோ இல்லையோ ஆண்டுத் தொடக்கத்திலே புத்தம்புதிய புத்தகம் ஏடு, பேனா, பென்சில் வாங்கிவிட வேண்டும் என்று துடிக்கின்றார்கள். அன்றும் அப்படித்தான் பள்ளிக்கூடத்திற்கு எதிரில் இருந்த அருவி நிலையத்தை நோக்கி ஓடினர். அவர்கள் அருவி நிலையத்தின் வாயிலைச் சென்றடைவதற்கு முன்னே பக்கத்தில் இருந்த சிற்றாறு நிலையத்தின் முதலாளி பிள்ளைகளே இங்கே வாருங்கள் "புதிய பேனாக்கள், பென்சில்கள் பாருங்கள்" என்று அழைத்தார்.

சில மாணவர்கள் அங்கு சென்றனர். அதைக்கண்ட அருவிநிலையத்தாருக்கு ஒரே ஆத்திரமாக இருந்தது. "நேற்று கடை திறந்தவன் நம்மோடு போட்டிக்கு வருவதா" என்று நினைத்தனர். போட்டி உணர்ச்சி வந்து வெற்றிபெற வேண்டும் என்று தீர்மானித்து தானும் பிள்ளைகளை அழைக்கத் தொடங்கினார்.

"அதே பேனா அங்கே மூன்று ரூபாய்; இங்கே இரண்டு ரூபாய்" என்றார். அவருக்கு அடக்கமே இரண்டு ரூபாய் ஆயிற்று. இலாபம் இல்லாமற்போனாலும் போகட்டும் சிற்றாறு வற்றிவிடவேண்டும் என்று எண்ணி திடீரென விலையைக் குறைத்தார்.

'சிற்றாறு' நோக்கி ஒடிய மாணவர்கள் அனைவரும் 'அருவி'யை நாடினர்.

மறுநாள் சிற்றாறும் அதே பேனாக்களை இரண்டு ரூபாய் விலைக்கு விற்றது மாணவர்களில் சிலர் அங்கே குழுமினர்.

அருவிக்கு ஆத்திரம்; எப்படியும் சிற்றாற்றை மட்டம்தட்ட வேண்டும் என்று தீர்மானித்தனர். இலாபத்தில் கொஞ்சம் இழந்தாலும் கவலையில்லை என்று மேலும் விலையைக் குறைத்தனர்.

ஏராளமான பேனாக்கள் விற்பனையாயின.

மறுநாள் சிற்றாறு நிலையத்திலும் விலையில் வீழ்ச்சி!

அருவியினர் பின்னும் கொஞ்சம் குறைத்தனர். சிற்றாற்றினரும் சளைக்கவில்லை. இவர்கள் குறித்த விலைக்கே மறுநாள் அவர்களும் விற்கத் தொடங்கினர்.

இப்படியே சிலநாட்கள் கடந்தன. அருவியில் ஏராளமான பேனாக்கள் விற்பனை ஆயின. ஆனால் இலாபத்திற்கு மாறாக இழப்புதான் பெருகியது.

இதைத் தடுத்தாகவேண்டும் என்று முதலாளி தீர்மானித்தார். பக்கத்துக் கடைக்காரரிடம் சமாதானம் செய்துகொள்ளலாம் என்று எண்ணினார். பிற்பகல் ஓய்வான நேரத்தில் பக்கத்துக் கடைக்குப் போனார். வரவேற்பு, குளிர்நீர் அளிப்பு எல்லாம் முறையாக நடைபெற்றன.

அருவியார் மெல்ல பேச்சைத் தொடங்கினார்.

நமக்குள்ளே எதற்கு வீண் போட்டி, பகையெல்லாம். இப்படி ஒருவர்க்கொருவர் விலையைக் குறைத்துக்கொண்டால் நட்டம் நமக்குத்தானே? என்றார்.

"உங்களுக்குத்தான் நட்டம் எனக்கில்லையே"—சிற்றாற்றார்.

"என்ன அப்படிச் சொல்லுகின்றீர்கள்? நீங்களும்தானே குறைவான விலைக்கு விற்கின்றீர். நட்டம் தானே"

"நான் உங்கள் கடையில் அல்லவா பையனைவிட்டு வாங்கிவரச் செய்து விற்கிறேன். எனக்கேது நட்டம்" என்றார்.

அருவியார் திகைத்துப்போனார் தான் விலையைக் குறைத்த உடனே ஏராளமான வியாபாரம் நடப்பதும், மறுநாள் பக்கத்துக் கடையிலும் விலை குறைத்துப் போட்டிக்கு நிற்பதும் இப்போதுதான் அவருக்கு விளங்கிற்று.

மறுநாள் முதல் இரண்டு கடைகளிலும் ஒரே விலை. அழைப்பு இல்லாதது பிள்ளைகளுக்கு ஏமாற்றமே!

O

முகப்பு விளக்கம்

பேராசிரியை டொரோதி கிரோபுட் ஆட்கின் அவர்கள் 1964க்கான ரசாயனப் பரிவுக்கான நோபல் பரிசைப் பெற்றுள்ளார். இவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர் ஆவார். இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு பெண் நோபல் பரிசு பெறுவது இதுவே முதல் முறையாகும். இதுவரை இங்கிலாந்தில் எந்தப் பெண்மணியும் இப்பரிசைப் பெறவில்லையா என்று திகைக்கிறீர்களா? இதைவிட வியப்பான சங்கதி என்ன தெரியுமா? நோபல் பரிசுத் திட்டம் 1901-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த அறுபத்து நான்கு ஆண்டுகளில் திருமதி ஆட்கின் அவர்களையும் சேர்த்து மூன்றே மகளிர்தாம் நோபல் பரிசு பெற்றுள்ளனர்! பேராசிரியை ஆட்கின் அவர்கள் உருவமே அட்டையில் காண்பது.

3-ம் பக்கத் தொடர்ச்சி

"சார், சார், நீங்கள் ஒரு பெண் மானை வளர்க்கிறீர்களா, சார்? இது உண்மைதானா; சார்?"

"ஆம், குழந்தைகளே, உண்மை தான். உயரமான, அழகிய, மிகவும் அழகிய ஒரு மான் அது. அதன் பெயர் கோரா. நான் வைத்த பெயர் அது."

"கோரா! கோரா!" என்று குழந்தைகள் யாவும் கூவின. "அதற்கு அதன் பெயர் தெரியுமா? சார்?"

"இன்னமும் தெரியாது. என்றைக்காவது ஒரு நாள் அதன் பெயரை அது புரிந்துகொள்ளத் தான் செய்யும்."

"சார், சார், நாங்கள் அந்த மானைப் பார்க்கலாமா, சார்?"

"அதற்கென்ன? அவசியம் பார்க்கலாம். பள்ளிக்கூடம் முடிந்ததும் என்னுடன் வாருங்கள், காட்டுகிறேன்."

அன்று மாலை ஒரு குழந்தைகூட நேராக வீட்டிற்குப் போகவில்லை. அவர்கள் யாவரும் என்னைச் சூழ்ந்துகொண்டு என்னுடன் புறப்பட்டுவிட்டார்கள்.

வசந்த பருவம் தொடங்கியதும் கோராவினிடத்தில் ஏதோ மாற்றம் தென்பட்டது. அது நிம்மதியின்றி தவிப்பதுபோல் தோன்றியது.

அதன் குணமும் இப்போது கெட்டுப் போய்விட்டது, சாதுவாகயிருந்த அது இப்பொழுதெல்லாம் குதித்துப் பாய்ந்து சீறத் தலைப் பட்டது.

விரைவிலேயே கோடை காலத்து மித வெப்பம் தோன்றியது. அதையடுத்து மரங்கள் யாவும் பூத்துக் குலுங்கின.

ஒரு நாள், எனது போக்கிரிக் குழந்தைகளிடம் நான்ஒரு யோசனை கூறினேன்:

"குழந்தைகளே! நாம் மலையடி வாரத்திற்கு இன்பச் செலவு நடத்தினால் என்ன?"

"நல்லது சார், அவசியம் போகலாம் சார்" என்று கும்மாளமடித்தன, குழந்தைகள்.

"கோராவையும் நம்மோடு அழைத்துப் போவாமா?"

"நல்லது சார், அப்படியே செய்வோம்."

"சார், சார், நான்தான் கோராவைப்பிடித்து அழைத்துக்கொண்டு வருவேன்" என்று முந்திக்கொண்டது, ஒரு முந்திரிக்கொட்டை.

"இல்லை, நான்தான்" என்பது, மற்றொரு 'வாலில்லாக் குரங்கு'.

"நானும்தான் கோராவைப் பிடித்துக்கொண்டு வருவேன்" என்று சிணுங்கியது ஒரு சிறிய பெண்.

மறுநாள், எங்கள் கிராமமே அல்லோகலப்பட்டது. பள்ளிக் குழந்தைகள் அனைவருமே திரண்டுவிட்டனர். சிலர் தோளில் சிறு பைகளைச் சுமந்துகொண்டு வந்தனர். மற்றும் சிலர் தின்பண்டப் பொட்டணங்களைக் கொண்டு வந்தனர்.

பிரகாசமான ஒரு புல்வெளியை அடைந்ததும் எங்கள் 'பட்டாளம்' ஓய்வெடுத்துக் கொண்டது.

"இங்கே, எவ்வளவு பசுமையான, இளசான புல் இருக்கிறது. பாருங்கள்! இங்கு கோராவைச் சற்று மேய விடுங்கள்" என்றேன் நான்.

இதுதான் சமயம் என்று எண்ணிய நான், எனது...திட்டத்தைக் குழந்தைகளிடம் சொல்லலானேன்:

"குழந்தைகளே! கோரா ஏன் நிம்மதியின்றி இப்படித் துடிக்கிறது, தெரியுமா? முன்பு அது ஓடியாடித் திரிந்த இடங்களை, இப்பொழுது அடையாளம் கண்டுகொண்டு விட்டது. அதன் சொந்த காலடியின் மோப்பத்தையே அது உணர்ந்திருக்கக்கூடும்."

"இருந்திருக்கக்கூடும்!" என்று கூவினாள் ஒரு சிறுவள்.

"ஆம், அதற்குக் குட்டிகளும் இருந்திருக்கக்கூடும். அவற்றைத் தான் இப்பொழுது கோரா தேடுகிறது. அதனால்தான், இவ்வளவு நிம்மதியின்றித் துடிக்கிறது. நாம் அதை மறுபடியும் வீட்டிற்கு அழைத்துச் சென்றால், அதிக நாள் உயிருடன் இருக்காது. கவலையால் மனமிடிந்து மடிந்து போகும். எனவே, நாம் என்ன செய்யலாம்? வீட்டுக்குத் திருப்பி அழைத்துப் போகலாமா அல்லது இங்கேயே அதன் கட்டை அவிழ்த்துவிட்டு விடலாமா?"

"கோராவை நாம் விடுவித்துவிடலாம், சார்!"

எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு சிறுவன், மிகுந்த யோசனையுடன், "மறுபடியும் கோராவை ஏதாவது ஒரு வேடன் சுட்டுக் கொன்றுவிட மாட்டானா, சார்?" என்று கேட்டான்.

"அவ்வாறு நடக்காது, குழந்தைகளே. நாம் இப்பொழுது தங்கியிருக்கும் காட்டின் இப்பகுதியில் யாரும் வேட்டையாடக்கூடாது என்ற தடை உண்டு. எனவே, கோராவுக்கு ஆபத்து ஏற்படாது."

பிறகு நான் கோராவின் கழுத்தில் கட்டியிருந்த கயிற்றைக் கழற்றி, கடைசிமுறையாக அதன் மிருதுவான முதுகை வருடினேன். எல்லாக் குழந்தைகளும் கோராவைச் சுற்றிக்கொண்டு அதன் கழுத்தையும் முதுகையும் மிருதுவான கால்களையும் தடவிக்கொடுத்தன.

"ஓ, என் அன்பே, அழகிய, கோரா, நலமுடன் போய் வா!"

குழந்தைகளின் இந்தப் பிரியா விடை முடிவின்றி நிகழ்ந்துகொண்டிருக்கும்போல் தோன்றவே, குழந்தைகளை விலகும்படிப் பணித்தேன்.

முதலில் கோரா தயக்கத்துடன் காட்டை நோக்கி மெள்ள நடந்தது. பிறகு அம்புபோல் வேகமாகப்பாய்ந்தோடியது,

புதர்களுக்குப்பின் மறைவதற்கு முன்பு அது திடீரென்று நின்று, எங்கள் பக்கம் தலையைத் திருப்பிப் பார்த்தது. இந்நிகழ்ச்சி, எங்களுக்கு அது இறுதி வணக்கம் கூறுவது போல் தோன்றியது.

—டமயன் கால்போவ்.

1965-ம் ஆண்டு
நாவலர்
நாட்குறிப்பு
விலை 60 காசு
விபரங்கட்கு:-
சுகுமாரன் பதிப்பகம்,
சின்ன காஞ்சிபுரம்.

சென்னை
சித்ரா · சீனிவாசா
பாரத் · மகாலட்சுமி
தங்கம் மற்றும் தென்னாடெங்கும்

எம்.ஜி.ஆர்.
அளிக்கும்
அன்னை பிலிம்ஸ்

தாயின் மடியில்

கதை, வசனம் · சொர்ணம்
இசை · S.M.சுப்பையாநாயுடு
பாடல்கள் · வாலி · கண்ணதாசன்
ஒளிப்பதிவு · ஆர்.ஆர்.சந்திரன்
கலை · ராமசாமி
ஸ்டில்ஸ் · நாகராஜராவ்
ஸ்டுடியோ · சத்யா

டைரக்ஷன்
A.சுப்பாராவ்
தயாரிப்பு
கே.ஆர்.பாலன்



RIGHTS CONTROLLED BY MEENA FINANCIERS, MADRAS-28.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.